**O.S.No.13/2021**

வா.சா.1, திரு.முனியசாமி

நாள் : 28.01.2026 நேரம் : 11.55AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும். கையொப்பம் இடுவேன். கையொப்பம் தமிழில் இடுவேனா அல்லது ஆங்கிலத்தில் இடுவேனா என்றால் தமிழில் இடுவேன். கையொப்பம் இடும் போது இன்சியலுடன் தான் கையொப்பம் இடுவேன். நான் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண வாக்குமூலம் மற்றும் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நான் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா வழக்கின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான்குமால் தெரியும். வடக்கு சேது ஆசிரியர் இடம், கிழக்கே பானுமதி இடம், தெற்கே கிழமேல் வாய்க்கால் மற்றும் விளாங்கார் இடம், மேற்கே ரோடு உள்ளது. தாவா சொத்தின் மொத்த அளவு 8 1/2 சென்ட் என்றால் சரிதான். தாவா வழக்கு 8 1/2 சென்டிற்கு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய பாகத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். எனது பாகம் 1 1/2 சென்ட்.

2)எனது வழக்குரையிலோ, பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ நான் 1 1/2 சென்டிற்கு தான் வழக்கு செய்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 6ல் ஒரு பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 6 ஆண்கள் மற்றும் 1 பெண் மக்கள் . எங்களுக்குள் பாகபிரிவினை செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொதுவாக கிராமத்தில் சகோதரர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டால் வெண்ணிலை பத்திரத்தில் எழுத்து மூலமாக எழுதி கொள்வார்கள் என்றால் சரிதான். மேற்படி பெரியவர்கள் முன்னிலையில் நான் எழுதி வாங்கிய வெண்ணிலை பத்திரத்தின்

அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிராமங்களில் எழுதி வாங்காமல் வாய்மொழியாக பிரித்து கொள்ளும் வழக்கம் உண்டு என்றால் சரிதான்.

3)எனக்கு 2 திருமணம் ஆகி உள்ளது என்றால் சரியல்ல. ஒரே திருமணம் தான். எனது மனைவி பெயர் பானுமதி. எனக்கு 2 குழந்தைகள். மகள் சந்தானலெட்சுமி, மகன் பெயர் சதீஸ்குமார் ஆகும். தற்போது எனது மனைவி மற்றும் மக்கள் என்னுடன் இல்லை என்றால் மனைவி என்னுடன் இல்லை, மக்கள் என்னுடன் தான் உள்ளார்கள். எனது மனைவி தற்போது பூவிளத்தூர் கிராமத்தில் உள்ளார். எனது மனைவியையோ, மக்களையோ நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரவழைக்க முடியுமா என்றால் எனது மகன் தற்போது வெளியூரில் உள்ளார். எனக்கு நாகவள்ளி என்ற 2வது மனைவி உள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும் 2வது மனைவிக்கும் சாந்தகுமார் என்ற மகன் உள்ளார் என்றால் சரியல்ல. முதல் மனைவியும், நானும் எதனால் பிரிந்திருக்கிறோம் என்று சொல்ல முடியுமா என்றால் எனது மனைவி அவரது ஊருக்கு 1990 ல் சென்றுவிட்டார். அப்போது எனது மகனுக்கு 4 வயதிருக்கும்.

4) அதன் பிறகு நான் 2வது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. 2வதாக நாகவள்ளி என்று ஒருவரை திருமணம் செய்து கொண்டேன் என்றாலும், அதில் எனக்கு ஒரு மகன் உள்ளார் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் எனது உடன் பிறந்த மற்ற சகோதரர்களான 1, போஸ், 2.நாகராஜ், 3.ராஜேந்திரன், 4.அர்ச்சுனன், 5.பூங்கொடி ஆகியோர்களை சேர்க்கவில்லை என்றால் மேற்படி சகோதரர்கள் எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை அதனால் சேர்க்கவில்லை. சட்டப்படி பெண்களுக்கும் சொத்தில் பங்குள்ளது என்றால் சரிதான். நான் சொல்லுவது பாகம் பிரித்திருந்தால் வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்டபடி மொத்த சொத்திற்கும் எனது தகப்பனார் பெயரில் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணமான மனுவை எதற்காக தாசில்தாரிடம் கொடுத்தேன் என்றால் எனக்கு நினைவு இல்லை.

5)மேற்படி மனுவில் தாசில்தார் வாரிசு பிரச்சனை இருப்பதால் தகுந்த சிவில் நீதிமன்றத்தை அணுகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மனுவை வாதி இடத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு வீடு கட்டுவதாக கொடுத்த மனுவில் பரிசீலனை செய்ததில் பட்டா நிலமாக இருப்பதால் காவல் துறை மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள உத்தரவு போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் காவல் துறையில் புகார் அளித்தேனா என்றால் சரிதான். மேற்படி புகார் கொடுத்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு வயது 61. எந்த வருடம் திருமணம் செய்தேன் என்றால் 1983 ம் வருடம். நான் திருமணம் செய்த போது எனது தாய், தந்தை உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். முதலில் எனது மூத்த சகோதரர் போஸ் தான் திருமணம் செய்தார். மேற்படி போஸ் இறந்து சுமார் 1 1/2 வருடமாகிறது. அவருக்கு மனைவி, மக்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி போஸின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்க்கவில்லை.

6)நான் தாக்கல் செய்துள்ள பிராதில் கிழமேல் 5 அடி பாதைவிட்டு அதற்கு மேல் வடக்கு பக்கம் மேற்கில் எனது அண்ணன் போசுக்கும் அதற்கு பின்னர் எனக்கும், அதற்கும் கீழ்புறம் நாகராசுக்கும் அந்த பாதைக்கும் தெற்கு பக்கம் பிரதிவாதிக்கும், அதற்கடுத்து ராஜேந்திரனுக்கும், அதற்கடுத்து அர்ச்சுனனுக்கும் சொத்து பிரிக்கப்பட்டுள்ளதாக பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லுவது போல நீதிமன்றத்தில் எந்த விதமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 1992 ம் ஆண்டு இறந்தார். அப்போது எனது தாயார் உயிருடன் இருந்தார்.

7)என்னிடம் காட்டப்படும் என்னுடன் உடன் பிறந்த சகோதரர், சகோதரிகள் மற்றும் எனது தாயாருக்கும் கடந்த 15.10.1992 ம் தேதி பிறவா முறிவு பத்திரத்தில்

உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் இல்லை. இதில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் என்றாலும், வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் திருமணம் செய்து எனது மனைவி பிரிந்து சென்ற பின்னர் 2 வது திருமணம் செய்து கொண்டேன் என்றாலும் எனது மகனை பிரதிவாதி தான் பாதுகாத்து பராமரித்து வந்தார் என்றாலும், அதனடிப்படையில் என்னை தவிர்த்து எனது மகனை சேர்த்து 27.03.2002 ம் தேதி எனது சகோதர, சகோதரிகள் மட்டும் தாவா சொத்து உட்பட பிற சொத்துகளை கிராம பெரியோர்கள் முன்னிலையில் எழுதி பாக விஸ்தீரணம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )**

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.30PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.28 10:15:47 +0530